செ.வெ.எண்.32

நாள். 13.11.2017

இந்திய வேளாண்மை காப்பீடு நிறுவனம் மூலம் 2015–16ம் ஆண்டு பயறு வகைப் பயிர்களுக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு 7.21 கோடி இழப்பீட்டு தொகை விடுவிப்பு மாவட்ட ஆட்சியர் தகவல்

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டின் முக்கியத்துவம் குறித்து விரிவான அளவில் வேளாண்மைத்துறை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பயிர் காப்பீடு செய்வதன் மூலம் இயற்கை பேரிடர்களான வறட்சி, வெள்ளம் மற்றும் பூச்சிநோய் தாக்குதல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விவசாயிகள் பொருளாதார அடிப்படையில் தங்களை பாதுகாத்துக் கொள்ள இயலும். விவசாயிகள் தங்களுக்கு அருகாமையிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கி கிளைகளில் தங்களுடைய பயிர் காப்பீட்டுத் தொகையினை செலுத்தி இத்திட்டத்தில் பங்கு பெற்று பயனடையலாம்.

2015–16ம் ஆண்டு ராபி பருவத்தில் தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் உளுந்து மற்றும் பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்த 12,914 விவசாயிகளுக்கு 7.21 கோடி இழப்பீட்டு பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகை திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளின் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கணக்கில் ஓரிரு தினங்களில் வரவு வைக்கப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் குருவிகுளம் வட்டாரத்தில் 7662 விவசாயிகளும், மேலநீலிதநல்லூர் வட்டாரத்தில் 4570 விவசாயிகளும், சங்கரன்கோவில் வட்டாரத்தில் 503 விவசாயிகளும், கீழப்பாவூர் வட்டாரத்தில் 97 விவசாயிகளும் மற்றும் மானூர் வட்டாரத்தில் 82 விவசாயிகளும் இதன் மூலம் பயன் அடைவார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி